RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt23117

# தொல்காப்பியம் மற்றும் அகநானூற்றில் விளையாட்டுகள்

**த. கவிதா [அ, *]**

[அ] தமிழ்த்துறை மற்றும் ஆய்வுமையம், அரசுக்கல்லூரி சித்தூர், பாலக்காடு, கேரளம்-678104, இந்தியா

# Games in Tholkappiyam and Akananooru

**T. Kavitha [a, *]**

[a] Department of Tamil & Research Centre, Government College Chittur, Palakkad, Kerala-678104, India

* Corresponding Author: kavithavictoria@gmail.com

Received: 17-08-2022
Revised: 24-10-2022
Accepted: 02-11-2022
Published: 03-12-2022

Check for updates

## ABSTRACT

Grammar and literature play an important role in the lives of Tamils. It is a sport that is considered to be a hobby to get a special place in the culture and civilization of every people. From the Sangam age to this period, the contribution of games has dominated grammatical literature. Sports constitute the greatest wealth that can never be erased forever. Sports bring great joy and agility to human beings. Sports are also the best medicine for the body and life of human beings. They are also refreshing in the lives of human beings. They give the body the energy it needs, health, and a sense of togetherness. From children to adults, the game is well talked about and guided. As a result, everyone's ability to think more clearly and develop deeper reasoning and reasoning grows. In Tholkappiyam and Akananooru, the concepts of the song about the game are widespread and in harmony with each other. Sports are considered to be an important aspect of society.

**Keywords:** Tamil Grammar, Tholkappiyam, Akananooru, Sports

## முன்னுரை

பழந்தமிழர்களின் வாழ்வியலைப் புரிந்து கொள்வதற்கு பழந்தமிழ் நூல்கள் பலவகையில் துணைசெய்கின்றன. அவற்றுள் தொல்காப்பியம் பல்வகைத் தரவுகளை உள்ளடக்கிய தகுதி மிக்கது. மொழியியல், திறனாய்வியல், நாட்டாரியல், தொல்லியல் என்று பல்துறையினரும் விரும்பி நாடுகின்ற விடயங்கள் பலவும் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன. அந்நிலையில் இன்றைய தொல்லியலாளர்களால் அடையாளங்காணப்பட்ட 'புதிர்நிலை வழிபாடு' குறித்த புரிதலுக்கு தொல்காப்பியத்தை நாட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது.

## பழங்காலப் போர் முறைகள்

தொல்குடி மரபு சார்ந்த பெருங்கற்காலச் சூழலிலும் அதற்கு முன்பும் ஆநிரை கவர்தல், மீட்டல் முதலான போர்கள் நிகழ்ந்தன என்பதை பழந்தமிழ் நூல்களும் சில தொல்லியல் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. வெட்சி மற்றும் கரந்தை என்றவாறு அறியப்பட்ட பழங்காலப் போர்முறைகள் பற்றி தொல்காப்பியம் விளக்கியமைகின்றது. கற்காலத்தில் வரையப்பட்டதாகக் கருதப்படும் சில பாறைஓவியங்களிலும் அக்கால வழக்கிலிருந்த ஆநிரை தொடர்பான போர்முறைகள் புலப்படுகின்றன. அப்பழங்காலச் சமுதாயத்தில் தாய்வழிச் சமுதாயத்தின் எச்ச சொச்சங்கள் தொக்கிநின்றன. அதன்பயனாக போர்க்காலங்களில் தாய்த்தெய்வமாகிய கொற்றவையை வழிபட்டவாறு போருக்குப் புறப்பட்டார்கள். தொல்காப்பியப் பொருளதிகாரம் புறத்திணையியலில் அச்செய்தி பதிவாகியுள்ளது.

"மறம்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த

கொற்றவை நிலையும் அகத்திணைப் புறனே"

என்ற பதிவு கவனிக்கத்தக்கது (Manikkavasagan, 2006).

## போருக்கான ஆயத்தமுறைகள்

வெட்சி, கரந்தை முதலிய போருக்குப் புறப்படுவதற்கு முன்னால் வீரர்கள் தம்மை மனதளவில் தயார் செய்ய வேண்டிய நிலையில் இருந்தார்கள். அதன்பொருட்டு பலவிதமான வழிபாடுகளையும் சடங்குமுறைகளையும் நம்பிக்கைகளையும் மேற்கொண்டிருந்தார்கள். தொல்காப்பியம் புறத்திணையியல் வாயிலாக அவை குறித்த செய்திகளை அறிந்து கொள்கின்றோம். 'வெறியாட்டு அயர்ந்த காந்தள்', 'ஏந்து புகழ் போந்தை வேம்பு ஆர்', 'வாடா வள்ளி', 'வயவர் ஏத்திய ஓடாக்கழல்', 'உன்னநிலை', 'பூவைநிலை' என்று பல படிநிலைகளில் அவை மேற்கொள்ளப்பட்ட தன்மையினை தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார் (Manikkavasagan, 2006). அதாவது வேலனாகிய பூசாரி காந்தள் மாலையணிந்த நிலையில் வெறியாட்டெடுத்தல் வீரர்கள் தமக்கும் பகைவர்களுக்கும் வேறுபாடு தெரியும் பொருட்டு சூடிக்கொள்வதான அடையாளப்பூக்களைச் சூடிய நிலையில் ஆடிமகிழ்தல் வெற்றியின் இலக்கினை அடைவதற்கான அனைத்து வழிகளும் புலப்பட வேண்டும் என்பதற்காக "வாடாவள்ளி" என்னும் வழிபாட்டை நிகழ்த்துதல் மனதில் போர்வெறி மூண்ட நிலையில் பகைவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்ய வேண்டும் என்று எண்ணியவாறு தாம் அணிந்த வீரக்கழலைப் புகழ்ந்துரைத்தல் அதன் தொடர் நிகழ்வாக வெற்றி தோல்வியை குறித்துக் காட்டும் உன்னமரத்தைக் கண்டு வருதல் காயாம்பூவின் நிலையறிந்து நிமித்தம் உணர்தல் என்று போருக்குப் புறப்படுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட வழிபாடுகள், சடங்குமுறைகள், நம்பிக்கைகள் ஆகியன பற்றி தொல்காப்பியர் எடுத்துரைத்திருக்கின்றார்.

"வெறி அறி சிறப்பின் வெவ் வாய்வேலன்

வெறியாட்டு அயர்ந்த காந்தளும், உறு பகை

வேந்திடை தெரிதல் வேண்டி, ஏந்து புகழ்,

போந்தை, வேம்பே, ஆர், என வரூஉம்

மா பெருந் தானையர் மலைந்த பூவும்

வாடா வள்ளி, வயவர் ஏத்திய

ஓடாக் கழல் - நிலை உளப்பட, ஓடா

உடல் வேந்து அடுக்கிய உன்ன நிலையும்

மாயோன் மேய மன் பெருஞ் சிறப்பின்

தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்"

என்னும் நூற்பா போருக்குப் புறப்படுவதற்கு முன்னால் நிகழ்த்தப்படும் நிகழ்வுகளைப் பட்டியலிடுவதைப் பார்க்கின்றோம் (Manikkavasagan, 2006).

## 'வாடாவள்ளி'-விளக்கம்

மேற்சுட்டிய வெட்சி மற்றும் கரந்தைப் போருக்கான ஆயத்தமுறைகளில் ஒன்றான 'வாடாவள்ளி' வழிபாட்டுமுறை இங்கு கவனத்திற்குள்ளாகின்றது. அவ்வழிபாடு செல்வத்தைப் பறிகொடுத்த வீரர்களுக்கு ஒருவித ஊக்கமருந்தாகத் திகழ்ந்திருக்கின்றது. வழிபாட்டுடன் கூடிய போர்ப்பயிற்சி முறையாக அது அமைந்தது என்று கூறுவதற்கும் வழியுண்டு. அன்றைய வாழ்வியல் சூழலில் கால்நடைகள் பெருஞ்செல்வமாக கருதப்பட்டு வளர்க்கப்பட்டு வந்தநிலையில் அவற்றை

பிறர்(வெட்சியார்) கவர்ந்து செல்வார்களானால் அவற்றின் உடைமையாளர்கள் (கரந்தையார்) மனதளவில் துவண்டு விடுவது இயல்பே. அத்தகு மனச் சோர்விலிருந்து விடுபட்ட நிலையில் கால்நடைகளைக் கவர்ந்து சென்ற மாற்றாருடன் (வெட்சியாருடன்) போராற்றி தமது செல்வங்களான கால்நடைகளை மீட்க வேண்டிய நிலை கால்நடை உரிமையாளர்களுக்கு உருவானது. எனவே உடனடியாகப் போராற்றுவதற்குத் தேவையான உறுதிமிக்க மனநிலையை அடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்காக உளவியல் சார்ந்த சில பயிற்சிமுறைகள் அல்லது சில சம்பிரதாயங்கள் அன்றைய தமிழர்களால் கடைபிடிக்கப்பட்டன. அவற்றில் 'வாடாவள்ளி' வழிபாடு குறிப்பிடத் தகுந்த இடத்தினைப் பெற்றது.

'வாடாவள்ளி' என்பது எளிதில் உள்ளே சென்று வெளியே வர இயலாதவாறு அமைக்கப்பட்ட பல்வேறு சூழ்நிலை வழிகளைக் கொண்ட ஒரு புதிர்க்கட்டம் என்று அறிய முடிகின்றது. அவ்வழிகள் மிகுந்த கவனமுடன் செல்ல வேண்டிய நிலையில் உருவாக்கப்பட்டவை. வளைந்து நெளிந்து செல்லும் நிலையில் அமைந்த அந்த வள்ளிவழிகள் (கொடி போன்றதான வழிகள்) வழியாக வழிதவறாமல் சென்று வருதலாகிய செயலில் வீரர்கள் ஈடுபட்டிருந்தார்கள். அதனால் உளவியல் நிலையில் ஒருவித ஊக்கத்தினையும் ஆற்றவிருக்கும் காரியத்தில் அறிவுக்கூர்மையுடன் செயலாற்றுவதற்கான பயிற்சியினையும் அடைந்தார்கள்.

## உரைகள் வழி உணரத் தக்கவை

தொல்காப்பியரால் சுட்டப்பட்ட 'வாடாவள்ளி' வழிபாடு குறித்த விரிவான விளக்கங்கள் பழைய உரைநூற்களில் இடம்பெறவில்லை. தொல்காப்பியருக்கும் உரையாசிரியர்களுக்குமான கால இடைவெளியில் அவ்வழிபாட்டில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் "வாடாவள்ளி" என்பதற்கு 'வாடுகின்ற கொடியல்லாத வள்ளி என்னும் கூத்து' என்ற நிலையிலான விளக்கங்களே அனைவராலும் தரப்பட்டிருக்கின்றன. இளம்பூரணரும் வாடுதல் இல்லாத வள்ளி. "வள்ளி" என்பது ஒரு கூத்து. அஃது அந்நிலத்தின் நிகழ்தலின் வாடாவள்ளி என்றார்" என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது (Sanmugampillai, 1995). நச்சினார்க்கினியரும் "வாடாவள்ளி - வாடுங்கொடியல்லாத வள்ளிக்கூத்து. அஃது இழிந்தோர் காணுங் கூத்து" என்று கருத்துரைக்கின்றார் (Nachinaarkkiniyar, 1947). இவ்விரு பழைய உரையாசிரியர்களைப் பின்பற்றிய நிலையில் பிற்கால உரையாசிரியர்களும் உரை வகுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

"விண் தோய் மாடத்து விளங்கு சுவர் உடுத்த

வாடா வள்ளியின் வளம் பல தரூஉம்

நாடு பல கழிந்த பின்றை"

என்று பெரும்பாணாற்றுப்படையில் 'வாடாவள்ளி' பற்றிய செய்தி காணப்பெறுகின்றது. அந்நூலுக்கு உரை வகுத்த புலவர் கா. கோவிந்தனார் "வானளாவ உயர்ந்த மாடங்களை உடைய நல்ல நகரங்களில் வள்ளிக்கூத்து ஆடி ஆடி மகிழ்வதற்குக் காரணமான வளங்கள் பலவற்றையும் தருகின்ற நாடுகள் பலவற்றைக் கடந்து போன பிறகு" என்று உரை தருகின்றார் (Govindhanaar, 1996). வானளாவ உயர்ந்த மாடங்களையுடைய நல்ல நகரங்களில் வாடாவள்ளி வழிபாடு நிகழ்வதனால் வளங்கள் பலவும் கிடைக்கப் பெற்ற நிலையினை அப்பாடலடிகள் சுட்டுவதாகக் கருத இடமுண்டு.

குறுந்தொகையிலும் 'வாடா வள்ளி' சொல் இடம்பெறுவதுண்டு

"அவரே, கேடுஇல் விழுப்பொருள் தருமார், பாசிலை

வாடா வள்ளிஅம் காடு இறந்தோரே"

என்னும் பாடலடிக்கு விளக்கம் தர முற்படும் வி.நாகராசனும் வாடா வள்ளி, வள்ளிக் கூத்து எனப்படும் (Nagarasan, 2004). இனிய வள்ளிக்கூத்துக்கள் நடைபெறும் நாட்டின் நீங்கி, பசிய இலைகளை உடைய வள்ளிக்கொடி படர்ந்த காட்டினைக் கடந்து சென்றாரெனத் தலைவி வருந்தினள். வள்ளிக்கூத்து

அன்மையைக் குறிப்பிட, பாசிலை என்ற அடைமொழி தரப்பட்டது. வள்ளியின் கிழங்கினை உண்ண வரும் கொடிய விலங்குகளின் இன்னலை நினைத்து வருந்தியதாகவும் கொள்ளப்படும்."(Nagarasan.V, 2004,) என்று விளக்கம் தரும் பகுதியில் வாடாவள்ளி என்பதனை கூத்து என்று கூறியிருப்பதை உணர முடிகின்றது. இதனை கருதிப்பார்த்த நிலையில் கி.ரேவதி என்பவரும் "பண்டைய மக்கள் பலரும் ஆடிய ஆடல்களில் வள்ளிக்கூத்து என்பதும் ஒன்று. நாட்டு வளமும் வெற்றியும் பெற்றுத் தந்த வள்ளிக்கொடியின் பெருமையைப் பாடி ஆடுவது ஆகும்." என்று கருதியிருப்பதைக் காணமுடிகின்றது (Revathi, 2018). ஆனால் அக்கூத்து எவ்வாறு நிகழ்த்தப்பட்டது என்பது பற்றி எவராலும் எடுத்துரைக்க இயலவில்லை. "வள்ளிக்கூத்து என்பது குறிஞ்சி நிலத்து மக்களின் கூத்து வகை. இது எப்படி ஆடப்பட்டது என்பது பற்றிய விளக்கம் கிடைக்கவில்லை. வள்ளியும் முருகனும் ஆடுவது போன்ற நாட்டிய நாடகப் பாணியில் அமைந்த நாடோடிக் கூத்து என்று கருத இடமிருக்கிறது" என்பதான ஊகங்களே முன்வைக்கப்படுகின்றன (Subramaniyam, 1977).

இங்கு கவனிக்க வேண்டிய ஒரு விடயம் என்னவெனில் பல்வேறு வகைக் கூத்துகளையும் விளக்கியமையும் சிலப்பதிகாரத்தில் வள்ளிக் கூத்து பற்றிய தகவல்கள் எதுவும் இடம்பெறவில்லை என்பதாகும். ஏனெனில் சங்க காலத்திலும் அதற்குப் பிறகும் "வள்ளிக்கூத்து" என்ற ஒன்று தமிழகத்தில் நிகழ்த்தப் பெறவில்லை. பிற்காலத்தில் நச்சினார்க்கினியர் வாழ்ந்த காலச்சூழலில் அது நாட்டார் கூத்துக்களில் ஒன்றாக வளர்ந்திருக்க வேண்டும். அதன் காரணமாகவே அவர் "அது இழிந்தோர் காணும் கூத்து" என்று உரைத்திருக்கின்றார். வேத்தியல், பொதுவியல் என்றவாறு அனைத்துக் கலைகளையும் எடுத்துரைக்கும் இளங்கோ

வடிகள் வள்ளிக்கூத்து என்ற ஒரு கலை வடிவத்தை மட்டும் வேண்டுமென்றே பதிவு செய்யாமல் விட்டுவிட்டார் என்று கூற இயலாது. அக்கூத்து அக்கால வழக்கில் காணப்பெறாமையால் சிலப்பதிகாரத்தில் இடம்பெறவில்லை. ஆனால் அக்காப்பியத்திற்கு உரை வகுத்த ந.மு.வேங்கடசாமி நாட்டார் வள்ளிக்கூத்து பற்றிய பதிவு காப்பியத்தில் இடம்பெற்றிருப்பதாகக் கூறுவது முரண்பட்ட கருத்தாக உள்ளது. வேட்டுவ வரியில் இடம்பெறும்.

"கொற்றவை கொண்ட அணிகொண்டு நின்றஇப்

பொற்றொடி மாதர் தவமெண்ணை கொல்லோ

பொற்றொடி மாதர் பிறந்த குடிப் பிறந்த

விற்றொழில் வேடர்குலனே குலனும்"

"ஐயை திருவின் அணிகொண்டு நின்றஇப்

பையரவு அல்குல் தவமென்னை கொல்லோ

பையரவு அல்குல் பிறந்த குடிப்பிறந்த

எய்வில் எயினர் குலனே குலனும்"

"பாய்கலைப் பாவை அணிகொண்டு நின்றஇவ்

ஆய்தொடி நல்லாள் தவமென்னை கொல்லோ

ஆய்தொடி நல்லாள் பிறந்த குடிப்பிறந்த

வேய்வில் எயினர் குலனே குலனும்"

என்னும் மூன்று பாடல்களுக்கு விளக்கம் தர முற்பட்ட நிலையில் "இவை மூன்றும் "வெறியறி சிறப்பின்" (தொ.புறத்.5) என்னும் சூத்திரத்து 'வாடாவள்ளி' என்பதனான், வள்ளிக்கூத்து எனப்படும் என்னை? 'மண்டம ரட்ட மறவர் குழாத்திடைக் கண்ட முருகனும் கண்களித் தான் - கண்டே, குறமகள் வள்ளிதன் கோலங்கொண்டாடப் பிறமகள் நோற்றாள் பெரிது' என்பது வள்ளி. ஏவில் எயினர் எனப் பாடங்கொள்வர் அரும்பதவுரை ஆசிரியர்" என்று வலிந்து கருத்துரைப்பதைக் காண்கின்றோம் (Sree

Chandhran, 1998). இது வாடாவள்ளி குறித்து பிறழ உணரப்பட்ட தன்மையைக் காட்டுகின்றது (Venkadasami Nattaar, 2014).

சிலர் வள்ளிகதையுடன் பொருத்திப்பார்த்த நிலையில் குறிஞ்சிநில மக்களின் கூத்துவகை என்றும் கருதுவதுண்டு. இங்ஙனம் இளம்பூரணரிலிருந்து இன்றுவரை பலரும் "வாடாவள்ளி" என்பதனை வழிபாட்டோடு தொடர்புடைய ஒருவகைக் கூத்து என்றே கருதி வந்த நிலையில் அக்கூத்து எவ்வாறு நிகழ்த்தப்பட்டது என்று அறிய இயலாத நிலை இன்றுவரை நிலவி வருகின்றது. அந்நிலையில் தற்காலத் தொல்லியலாளர்கள் வெளிப்படுத்திய 'புதிர்நிலை வழிபாடு' என்பது பழங்காலத்தில் காணப்பட்ட 'வாடாவள்ளி' வழிபாடே என்று உறுதிப்படுத்த முடிகின்றது. அதனைக் கூத்து என்று கருதுவதைவிட ஒரு வழிபாடு என்று கருதுவதே பொருத்தமாக இருக்கும். ஏனெனில் தமிழகத்தின் பல பகுதிகளில் இன்றைக்கும் அவ்வழிபாடு சிற்சில மாறுபாடுகளுடன் நிலைபெற்றிருப்பதைக் காண முடிகின்றது. அவ்வழிபாட்டினை இன்றைய தொல்லியலாளர்கள் "புதிர்நிலை வழிபாடு" என்று குறிப்பிடுகின்றார்கள்.

## புதிர்நிலைகள்

மகாபாரதத்தில் காணலாகும் சக்கரவியூகத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் புதிர்நிலை வழிபாடுகள் பழங்காலத்தில் நம் பாரத நாடு மட்டுமின்றி கிரீட் தீவு, சார்டீனியத்தீவு, சிரியா போன்ற பல பகுதிகளிலும் நிலவியிருந்ததை வரலாற்றாய்வாளர்கள் கண்டுணர்ந்திருக்கின்றார்கள். நம் நாட்டிலும் அவ்வழிபாடு நிலவியிருந்ததற்கான சான்றுகளை ஒரிசா, கோவா, குருச்சேத்திரம், ஆந்திரப்பகுதி என்று பலபகுதிகளிலும் பரவலாகக் காண முடிகின்றது. ஆனால் அவற்றில் பல பாறைகளில் கொத்தி வைத்த நிலையில் அல்லது கோவில் சுவர்களில் செதுக்கப்பட்ட நிலையில்தான் காணப்படுகின்றன. நம் தமிழகப் பகுதிகளில்தான் உண்மையான புதிர்நிலை வழிபாட்டிடங்களை நேரடிச் சான்றுகளாகக் கண்டறிந்திருக்கின்றார்கள்.

## சக்கரவியூகம்

தமிழகப்பகுதிகளில் காணப்படும் புதிர்நிலை வழிபாட்டிடங்கள் மகாபாரதத்தில் இடம்பெற்ற சக்கரவியூகத்துடன் பல நிலைகளில் ஒத்து விளங்குகின்றன. "மகாபாரதத்தில் கூறப்படும் சக்கரவியூகம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. சிலர் இந்த வியூகத்தைப் பற்றி அறிந்திருந்தாலும் அர்ஜுனன் மட்டுமே இந்த வியூகத்தை உடைத்து வெற்றி கண்டதாக மகாபாரதத்தில் கூறப்பட்டிருக்கும். பெயருக்கேற்றாற்போல் சக்கர வடிவத்தில் இருக்கும் வியூகத்தில் ஏழு அடுக்குகள் இருக்கும். ஒவ்வொரு அடுக்கிலும் வீரர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்லும். வியூகத்தின் மையத்தில்தான் படைத்தலைவர் இருப்பார். ஒரு வேளை வியூகத்திற்குள் நுழைந்து விட்டால் வீரர்களைக் கொல்ல கொல்ல அந்த இடத்திற்கு மற்ற வீரர்கள் வந்து சுழன்று கொண்டிருப்பர். இதனால் உள்ளே நுழைபவர் எந்த அடுக்கில் இருக்கிறோம் என்று குழம்பி உளவியல் ரீதியாக பாதிக்கப்படுவர். மேலும் சக்கர வியூகத்தை முறியடிக்கும் கணக்குத் தெரிந்தால் மட்டுமே அதை விட்டு வெளியே வர முடியும்" (Saranraj, 2018).

"சக்கரவியூகத்தில் மிகப்பெரிய கணிதம் ஒன்று ஒளிந்துள்ளது. அதனை அறிந்தால்தான் அதனை முறியடிக்க முடியும். அதில் இடம்பெறும் ஏழு அடுக்குகளை உடைக்கும்போது 1/7 என்ற அளவீட்டில் கணக்கிட வேண்டும். இந்த கணக்கின்படி 1/7 = 0.142857142857142857 என்று அளவிடும்போது 142857 என்ற எண் திரும்பத் திரும்ப வரும். இதுதான் தந்திரம். ஒவ்வொரு சக்கரமும் உடையும்போது அந்த இடத்திற்கு வேறு வீரர்கள் வந்து விடுவதால் இந்த சக்கரம் சுழன்று கொண்டே இருக்கும். ஒவ்வொரு அடுக்கையும் கடக்கும்போது ஒரு எண்ணை அதிகரிக்க வேண்டும். இறுதியாக கடைசிச் சக்கரத்தில் நுழையும்போது ஏழுமடங்கு ஆற்றலுடன் போர் புரிய வேண்டும். அப்பொழுதுதான் சக்கர வியூகத்தை உடைக்க இயலும். ஆன்

மீகமும் அறிவியலும் இரட்டைக்குழந்தைகள் போல என்பதை நிரூபிப்பதற்கான உதாரணம்தான் இந்த சக்கரவியூகம்" என்று சக்கரவியூகம் குறித்தான சில செய்திகளை தந்திருக்கின்ற நிலையில் தமிழகத்தில் காணலாகும் 'வாடாவள்ளி' வழிபாடாகிய புதிர்நிலை வழிபாட்டில் இடம்பெறும் வழிகளின் எண்ணிக்கை, ஒழுங்கமைவு மற்றும் வடிவம் ஆகியன பற்றி கவனித்தல் வேண்டும். அக்கவனத்தால் கிடைக்கின்ற முடிவு என்னவெனில் பழந்தமிழர்கள் சக்கரவியூகம் குறித்துத் தெளிவாக அறிந்திருந்தார்கள் என்பதுதான். சக்கரவியூகத்தில் வீரர்கள் எவ்வகையில் அணிவகுத்து நிற்பார்களோ அவ்வகையிலான ஒரு வடிவமைப்பை உருவாக்கி அதற்குள் சென்று வருவதான ஒரு வழிபாட்டுமுறையினை பழந்தமிழர்கள் மேற்கொண்டிருந்திருந்தார்கள். அதனால் ஆற்றும் போர் மீதான சரியான கவனம், போர் உத்திகளைப் புரிந்து கொள்ளுதல் போன்றதான பயிற்சிகள் கிடைத்திருக்கின்றன. எனவே அவ்வழிபாடு ஒருவிதப் போர்ப்பயிற்சியாக அமைந்தது எனலாம் (Saranraj, 2018).

## தமிழகப் புதிர்நிலைகள்

தமிழர்கள் அமைத்த புதிர்வழிகளாகிய 'வாடாவள்ளி' வழிகள் ஏழு சுற்றுகள் கொண்டனவாகக் காணப்படுகின்றன. ஏழுசுற்றுகள் அமைந்த சக்கரவியூகத்திற்குள் சென்று போரிடுகின்ற வீரனுக்கு மிகுந்த மனதிடமும், உடல்திறனும், அறிவாற்றலும், நுண்ணுணர்வும் தேவை. அதை கருத்தில் கொண்ட பழந்தமிழ் வீரர்கள் அவை தமக்கும் கைவசமாக வேண்டும் என்று விரும்பினார்கள். அதற்காக அச்சக்கரவியூகம் போன்றதான ஒரு புதிர்வழியை உருவாக்கி அதற்குள் சென்று வழிமாறாமல் வெளிவந்த நிலையில் மனதளவில் ஒருவித ஊக்கத்தினை அடைந்தார்கள். பிறகு அதுவே போருக்குப் புறப்படுவதற்கு முன்னால் செய்கின்ற வழிபாட்டுச் சடங்காக மாற்றமடைந்தது. அவ்வாறு வீரர்கள் வழிபட்ட நிலையில் போருக்குச் சென்றபோது ஊக்கமுடன் போரிடுவதற்கான ஆற்றலை மனதளவில் பெற்றார்கள். இந்நிலையில் அவ்வழிபாடு வீரர்களின் உள்ள உறுதிக்கு வித்திட்டது. அப்புதிர்நிலைகள் பல வடிவங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. வட்டப்புதிர்நிலைகள், சுருள்வழிப் புதிர்நிலைகள், சதுரப் புதிர்நிலைகள், செவ்வகப் புதிர்நிலைகள் என்று பல வடிவங்களில் அவை காணப்படுகின்றன.



படம் -1



படம் -2




படம் -3

படம் -1. கிருஷ்ணகிரி - எணிபெண்டாஅகநள்ளி - சுருள்வழிப்புதிர்நிலை, படம் -2. வேம்படித்தாளம் - வட்டப்புதிர்நிலை, படம் -3. வட்டப்புதிர்நிலை அமைப்பு

## சக்கரவியூக அமைப்பு

வடதமிழகத்தைச் சார்ந்த கிருஷ்ணகிரிப் பகுதியிலுள்ள எணிபெண்டா அகநள்ளி அருகே வரலாற்றாய்வாளர்களால் முதன்முதலாக சக்கரவியூக அமைப்பொன்று(புதிர்நிலை) கண்டறியப்பட்டது. (படம்-1) அத்தகு சக்கரவியூக வடிவமைப்புகளையே தொல்காப்பியர் 'வாடாவள்ளி' என்று குறிப்பிட்டார். ஏழு சுற்றுவழிகள் கொண்ட வட்டவடிவிலான அப்புதிர்நிலை தொல்காப்பியர் சுட்டியமைந்த உண்மையான "வாடாவள்ளி" வழிபாட்டிடமாகும். ஜூன் லூயிஸ் போர்ஜியஸ் என்ற புதிர்நிலை

ஆய்வாளர் பெருங்கற்காலக் கல்திட்டைகளுக்கிடையில் இதனைக் காணமுடிவதால் இதன் காலம் கி.மு. 1000 ஆண்டுகளாக இருக்கலாம் என்று கணிக்கின்றார் (Muthusami, 2017).



படம். 4



படம். 5

படம்.4 சதுரப்புதிர்நிலைஅமைப்பு படம். 5 கம்பையநல்லூர் - சதுரப் புதிர்நிலை நல்லூர் சதுரப்புதிர்நிலை

சேலம் மாவட்டத்திலுள்ள வேம்படித்தாளம் என்ற இடத்தில் சேலம் மாவட்ட வரலாற்றுத் தேடல் குழுவினரால் கண்டறியப்பட்ட வட்டவடிவ வாடா வள்ளியாகிய புதிர்நிலை வழிபாட்டிடம் உலகளவில் கண்டறியப்பட்ட புதிர்நிலைகளில் பெரியதாகக் கருதப்படுகின்றது. (படம்-3) இங்கு ஒரே இடத்தில் அருகருகில் இரண்டு 'புதிர்நிலைகள்' அமைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது வழிபாட்டில் இல்லாத இப்புதிர்நிலைகளை சிறிது காலத்திற்கு முன்புவரை மக்கள் வழிபட்டுக் கொண்டிருந்தார்கள். அமாவாசை மற்றும் முழுநிலவு நாட்களில் தாம் நினைத்தது நிறைவேற வேண்டும் என்பதற்காக அப்புதிர்ப்பாதைகளுக்குள் வழி மாறாமல் சென்று வருவதான வழிபாட்டினை மக்கள் நிகழ்த்தியிருக்கின்றார்கள். தற்பொழுது அத்தகு வழிபாடு அருகி விட்டதாகத் தெரிகின்றது.

கம்பையநல்லூர் என்னுமிடத்தில் சுகவன முருகன் குழுவினரால் ஒரு 'புதிர்நிலை' கண்டறியப்பட்டது. இதுவும் பெரிய அளவிலான புதிர்நிலையே. இது சதுர வடிவில் அமைந்திருக்கின்றது. (படம் -5) இதனை இன்றுவரை மக்கள் வழிபடுவது சிறப்பு. அடுத்ததாக பொள்ளாச்சிக்கு அருகிலுள்ள கெடிமேடு பகுதியில் திருப்பூர் வீரராசேந்திரன் தொல்லியல் மற்றும் வரலாற்று ஆய்வு மையத்தைச் சார்ந்தவர்களால் ஒரு சதுரவடிவப் புதிர்நிலை கண்டறியப்பட்டது. இது இரண்டாயிரம் ஆண்டுப் பழமையுடையதாகக் கருதப்படுகின்றது. புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த கீரமங்கலத்தில் சுமார் 3000 ஆண்டுகள் பழமையான சதுரவடிவப் புதிர்நிலை ஒன்றினைக் கண்டறிந்திருக்கின்றார்கள். இது சுண்ணாம்புத் திட்டைகளால் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் திருச்சி, நெல்லை போன்ற பகுதிகளிலும் இது போன்றதான புதிர்நிலை வழிபாட்டிடங்கள் காணப்படுவதாக வரலாற்றாய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

கீரமங்கலம் புதிர்நிலை தவிர மேற்கண்ட புதிர்நிலைகளெல்லாம் இயற்கையாகக் கிடைக்கும் உருண்டைவடிவக்கற்களை நட்டுவைத்த நிலையில் அமைக்கப்பட்ட புதிர்நிலை வழிகளாகக் காணப்படுகின்றன. அப்புதிர்நிலை வழிகள் ஏழு சுற்றுக்களைக் கொண்டனவாக அமைந்திருக்கின்றன. அதனால் மக்கள் அவற்றை 'ஏழுசுற்றுக் கோட்டை' என்றும் குறிப்பிடுகின்றார்கள். நாட்டுப்புற மக்களால் 'ஏளுசுத்துக் கோட்டை' என்று வழங்கப்பட தற்கால வரலாற்றாய்வாளர்கள் அதன் தன்மை கருதி 'புதிர்நிலை' என்று பெயரிட்டிருக்கின்றார்கள். இவற்றின் அருகில் ஏதேனும் ஒரு தாய்த்தெய்வத்தின் கோயில் இடம்பெறுவதுண்டு. இது தொல்காப்பியர் சுட்டியமைந்த 'கொற்றவை' வழிபாட்டினை நினைவுறுத்துகின்றது. பொள்ளாச்சிப் பகுதியிலுள்ள புதிர்நிலைக்கு அருகில் ஏழுசுற்றுக்கோட்டை மாரியம்மன் கோயில் காணப்படுகின்றது. பொதுவாக இப்புதிர்நிலைகளெல்லாம் பண்டைய வணிகப் பெருவழிகளுக்கருகில் இடம்பெற்றிருப்பதாக வரலாற்றாய்வாளர்கள் கூறுகின்றார்கள். பண்டைக்காலங்களில் ஆனிரை கவர்தல் தொடர்பான காரணங்களால் இனக்குழு அரசுகளுக்கிடையே அடிக்கடி போர்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். அதனால் போருக்கான ஆயத்தமுறைகளில் ஒன்றாகிய 'வாடாவள்ளி' வழிபாட்டிடத்தினை அதன் தேவை கருதி அழியாத நிலையிலுள்ள வழிபாட்டிடமாக

உருவாக்கியிருக்கின்றார்கள். இவ்வழிபாட்டுமுறை சுமார் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வழிபாட்டுமுறை என்று தொல்லியலாளர்களால் கருதப்படுகின்றது.

## புதிர்நிலை வழிபாடுகள்

தமிழகத்தில் கண்டறியப்பட்ட புதிர்நிலைகளில் ஏழுபட்டைத் தளப்பாதைகள் இடம்பெற்றிருக்கின்றன. பிற இடங்களில் பாதைகளின் எண்ணிக்கையில் மாறுபாடு காணப்படுவதாக வரலாற்றாய்வாளர்கள் கூறுகின்றார்கள். அதன் விதிகளை அனுசரித்து வெற்றி காண்பவர்கள் எண்ணியதை அடைவர் என்பது நம்பிக்கை. விதிகளை அனுசரிக்காமல் கற்களைத் தாண்டிச் சென்றவர்களுக்கு அல்லது பாதை தாண்டிச் சென்றவர்களுக்கு எண்ணியது நிறைவேறாது என்று மக்கள் நம்புகின்றனர். தற்காலத்தில் இது வளமை வழிபாட்டுடன் தொடர்புடையதாகத் தெரிகின்றது.

இன்றைய சூழலில் கால்நடைப் பெருக்கம், குழந்தைவரம், நோய்நீங்கல் ஆகியவை புதிர்நிலை வழிபாட்டின் பொதுவான நம்பிக்கைகளாகக் காணப்படுகின்றன. எனவே இவ்வழிபாட்டுமுறை சங்ககால மக்களால் "வளம்பல தரூஉம் வாடா வள்ளியாக" வழங்கப்பட்ட வழிபாடுதான் என்பது உறுதியாகின்றது. தொல்காப்பியர் மற்றும் அவர்காலத்திற்கு முன்னால் இவ்வழிபாட்டினை வீரர்கள் மட்டும் மேற்கொண்டிருந்த நிலையில் சங்ககாலச் சூழலில் அனைவரும் வழிபடும் வழிபாடாக உருமாற்றம் பெற்றிருக்க வேண்டும். அதனால் தான் பெரும்பாணாற்றுப்படை 'வளம்பல தரும்' வழிபாடாக அதனைச் சுட்டியிருக்கின்றது. அதை உரையாசிரியர்கள் 'வள்ளிக்கூத்து' என்று குறிப்பிட்டார்கள்.

## வாடா வள்ளி - பெயர்க்காரணம்

தற்காலத் தொல்லியலாளர்களால் 'புதிர்நிலை' வழிபாடு என்று குறிக்கப்படுகின்ற வாடாவள்ளி வழிபாட்டு வழிகள் சுண்ணாம்புச் சுதைகள் அல்லது உருண்டைவடிவக் கற்களைக் கொண்டு கொடிபோல அமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு அமைக்கப்பட்ட நிலையில் அவை ஏழு சுற்றுவழிகளைக் கொண்ட வட்டவடிவமாகவோ அல்லது சதுர வடிவமாகவோ காணப்படுகின்றன. அச்சுற்றுவழிகள் வளைந்துநெளிந்து செல்லும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளன. சுண்ணாம்புச்சுதை அல்லது உருண்டைவடிவக் கற்களால் அமைக்கப்படுவதால் அக்கொடிவழிகள் அல்லது வள்ளிப்பாதைகள் பலகாலங்களுக்கு அழியாதவாறு மக்களின் பயன்பாட்டுக்கு உகந்ததாக மாறியமைந்திருக்கின்றன. இவை சாதாரணமாக ஒரு செடியின் கொடி வாடுவதைப் போல வாடிவிடும் இயல்பிலிருந்து முற்றிலும் மாறுபட்ட நிலையில் வாடாமல் நிலைத்து நிற்பதால் "வாடாவள்ளி" என்று பழந்தமிழர்களால் சுட்டப்பட்டிருக்கின்றன.

புதிர்த்தன்மையுடன் வளைந்துநெளிந்து செல்லும் புதிர்வழிகளில் கவனமுடன் சென்று திரும்பி வருவதன் மூலம் பண்டையமக்கள் மன உறுதியையும் கூர்மைத்திறனையும் அடைந்தார்கள். இக்கட்டான நிலைகளில் கவனமுடன் செயலாற்றி வெற்றியடைவதற்கான உணர்வுத்திறனை இவ்வழிபாட்டின் மூலம் பெற்றார்கள். அதனால் போருக்குப் புறப்படுவதற்கு முன்னால் வீரர்கள் இவ்வழிபாட்டில் ஈடுபட்டு வெற்றியடைந்தார்கள். காலப்போக்கில் தாம் நினைத்தது நிறைவேற வேண்டும் என்பதற்காக அனைவருமே ஈடுபட்டார்கள் என்று தெரிகின்றது. போருக்குச் செல்லும் ஆடவர்கள் வெற்றியடைய வேண்டும் என்பதற்காகவும் தாம் சார்ந்த சமுதாயம் வளம் பல பெற்றுத்திகழ வேண்டும் என்பதற்காகவும் மகளிரும் இத்தகு வழிபாட்டில் ஈடுபட்டிருக்க வேண்டும். அதன் தொடர்ச்சியாக இன்றும் தருமபுரி கம்பையநல்லூர் புதிர்நிலை வழிபாட்டில் பெண்கள் பொங்கலிட்டு வழிபடுவதைக் காண்கின்றோம். அவர்கள் கால்நடைச்செல்வம் நிலைத்திருக்கும் பொருட்டும் நல்வாழ்வு வேண்டியும் பொங்கலிடுகின்றார்கள் என்று அறிகின்றோம். எனவே கால்நடை தொடர்பான போரில் வெற்றியடைய வேண்டும் என்னும் நோக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட வாடாவள்ளி வழிபாடு காலச் சுழற்சியில் பல்வகை வளங்களையும் வேண்டி வழிபடும் வழிபாடாக மாறியிருப்பது புலனாகின்றது.

## வள்ளி - சொல்விளக்கம்

வள்ளி என்ற சொல்லுக்கு 'கொடி' என்பது பொதுவான பொருள். கொடிபோன்று நீண்டு தொடர்ந்திருப்பதையும் வள்ளி என்று கூறுவது வழக்கம். வள்ளி என்ற சொல்லுக்குள் கொடிவகை, நிலப்பூசணி, தண்டு, கொடிபோன்று தொடர்ந்திருப்பது, கைவளை, தொய்யிற்கொடி, முருகக் கடவுளின் தேவி, குறிஞ்சிநிலப் பெண், குறிஞ்சி மகளிர் கூத்துவகை, சந்திரன் என்று பல பொருள்கள் அடங்கியிருப்பதைக் காண்கின்றோம் (Sanmugampillai, 1995). அவற்றுள் 'கொடி போன்று தொடர்ந்திருப்பது' என்ற பொருள் புலப்பாட்டை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

வள்ளி என்பதன் அடிச்சொல்லாகிய 'வள்' என்பதற்கு வளம், பெருமை, கூர்மை, வலிமை, வாள் என்று பல பொருள்கள் இருப்பதாக அறியமுடிகின்றது (Sanmugampillai, 1995). ஆகவே வளமை, பெருமை, வலிமை ஆகியனவெல்லாம் கிடைக்க வேண்டும் என்னும் நோக்கில் 'வாடாவள்ளி' வழிபாட்டை பண்டைய மக்கள் நிகழ்த்தினார்கள் என்று தெரிகின்றது. அதைத்தான் பெரும்பாணாற்றுப்படை பதிவுசெய்து காட்டியது என்று உணரவேண்டும். அந்நிலையே இன்றும் கம்பையநல்லூர் போன்ற புதிர்நிலை வழிபாட்டிடங்களில் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. எனவே தொல்காப்பியர் கால 'வாடாவள்ளி' வழிபாட்டுமுறையின் அறுபடாத தொடர்ச்சியினை கம்பையநல்லூர் போன்ற சில இடங்களில் இன்றும் காணமுடிகின்றது.

பொதுவாக வளைந்த நிலையில் காணப்படுவனவற்றையெல்லாம் பண்டையமக்கள் "வள்ளி" என்று அழைத்திருக்கின்றார்கள். பழந்தமிழ் வழக்காறுகளைத் தக்க வைத்திருக்கும் மொழியாகிய மலையாள மொழியில் 'கொடி' என்பதற்கு 'வள்ளி' என்ற சொல்லையே தற்காலத்திலும் பயன்படுத்துகின்றார்கள். "தேடிய வள்ளி காலில் சுற்றியது போல" ('கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல்' என்ற தமிழ்ப் பழமொழிக்கு இணையானது) என்ற மலையாளப் பழமொழி இங்கு நினைவுகூரத்தக்கது. இங்ஙனம் செடி வகைகளாகிய முல்லைக் கொடி, அவரைக் கொடி ஆகியவற்றை 'வள்ளி' என்று குறிப்பிடுவதுடன் வளைந்து காணப்படுவனவற்றையெல்லாம் 'வள்ளி' என்றே கூறுவது மலையாள மொழியின் மரபாகக் காணப்படுகின்றது.

பின்னிப்பிணைந்த, எளிதில் விடைகாண இயலாத சிக்கல்களைப் பற்றி தற்காலத் தமிழில் கூறும்போது 'இடியாப்பச் சிக்கல்' என்று கூறுவது வழக்கமாக இருக்கின்றது. 'இடியாப்பம்' என்ற உணவுப்பொருளின் வடிவமைப்பு எத்தகையது என்பதை அனைவரும் அறிவர். எனவே விரைவில் விடுவிக்க இயலாத சிக்கல்களைப் பற்றி நாம் கூறுவதாக இருந்தால் தற்காலச் சூழலுக்கு ஏற்றவாறு 'இடியாப்பச் சிக்கல்' என்று குறிப்பிடப் பழகி விட்டோம். ஆனால் கேரளப் பகுதியைச் சார்ந்த பாலக்காடு வட்டார மலையாள மக்கள் அத்தகைய சிக்கல் நிறைந்த ஒன்றைக் குறிப்பிடுகின்ற போது அதனை "வள்ளிக்கட்டு" என்றே கூறிவருகின்றார்கள். செடிகொடிகள் ஒன்றையொன்று பின்னிப்பிணைந்து கிடப்பதையும் 'வள்ளிக்கட்டு' என்றே வழங்குகின்றனர் (Sabdhavali, 1948). இந்த 'வள்ளிக்கட்டு' என்ற சொல்லுக்கும் 'வாடாவள்ளி' என்ற சொல்லுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதைக் காண்கின்றோம். எனவே வளைந்துநெளிந்த நிலையில் காணப்படுவனவற்றையெல்லாம் பொதுவாக 'வள்ளி' என்று குறிப்பிடுவது பண்டைத் தமிழர்களின் வழக்கம் என்ற புரிந்துணர்வு இங்கு கிடைக்கின்றது. அதனால் புதிர்வழிகளை 'வள்ளிகள்' அல்லது 'வள்ளிவழிகள்' என்று கூறுவது பொருத்தம் என்று தெரிகின்றது. கற்களாலும் சுண்ணாம்புச்சுதைகளாலும் உருவாக்கப்பட்ட அவ்வழிகள் அழியாதவை அல்லது வாடாதவை. அதன் காரணமாக அவற்றை "வாடாவள்ளி" என்று பொருத்தமுற அழைத்திருக்கிறார்கள்.

காலில் அணியும் காலணியின் 'வார்' அறுந்து போனால் மலையாளமொழியில் "செருப்பு வள்ளியற்று போயி" என்று கூறுவார்கள். இங்கு குறிப்பிடப்படும் 'வார்' என்பது வளையும் தன்மையுடையது. சிறுமியர் அணியும் பாவாடையின் கயிறு அறுந்து போனால் "நாடா அறுந்து விட்டது" என்று கூறுவது தமிழர்களின் வழக்கம். இதை மலையாளமொழியில் கூறுவதானால் "வள்ளி அற்று போயி" என்றுதான் கூறவேண்டும். ஒருவருக்கு தமிழ் எழுத்து வடிவங்களைக் கற்பிக்க வேண்டிய சூழலில் க் + இ (கி) க் + ஈ (கீ) என்ற கூட்டொலிகளின் எழுத்துவடிவத்தை எழுதச் சொல்லுகின்ற நிலை வருமானால் 'க'என்ற எழுத்து வடிவத்தின் மீது 'மேல்விலங்கு',

‘மேல்விலங்குச்சுழி’ இட்டு எழுத வேண்டும் என்று கூறுவோம். இதை மலையாள மக்கள் “வள்ளியிட்டு எழுது”, “தீர்க்க வள்ளியிட்டு எழுது” என்றுதான் கூறுவார்கள். அவ்வாறே கட்டுக்கட்டாகத் தெரிகின்ற வளைவுகளைக் கொண்ட ‘கட்டுவிரியன்’ பாம்பினை பாலக்காடு வட்டார மலையாளமக்கள் ’வள்ளிக்கட்டன்’ என்று குறிப்பிடுவர்.

மேற்கண்ட சான்றுகள் வாயிலாக மலையாள மக்கள் வளைந்த நிலையில் காணப்படுவனவற்றையெல்லாம் “வள்ளி” என்றே குறிப்பிடுகின்றார்கள் என்று தெரிகின்றது. இது தொல்காப்பியர் கால வழக்கு. அவ்வழக்கம் மலையாளமொழியில் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. எனவே வளைந்துநெளிந்து செல்லும் வழிகளைக் கொண்ட புதிர்நிலைவழிகள் பழங்காலத்தில் ‘வள்ளி’ என்று அழைக்கப்பட்டிருக்கின்றன. அவை நிரந்தரமாக அழியாத நிலையில் அமைக்கப்பட்டதனால் “வாடாவள்ளி” என்றவாறு அறியப்பட்டிருக்கின்றன.

தமிழ்ச் சூழலைப் பொறுத்தவரை காலந்தோறும் சொற்பிரயோகங்களில் மாறுபாடு ஏற்படுவது இயல்புதான். தொல்காப்பியர் காலத்தில் நிலவிய பல சொற்கள் தற்காலத்தில் வழக்கற்றுவிட்டன சில சொற்கள் பொருள்மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கின்றன. அதனுடன் காலத்தின் தேவைக்கேற்றவாறு புதிய சொற்களும் தமிழ்மொழியில் தோன்றிக் கொண்டேயிருக்கின்ற நிலையில் தமிழ்மொழி தன்னை புதுப்பித்துக் கொண்டேயிருக்கின்றது. அந்நிலையில் சில பழைய வழக்காறுகளை அறிய வேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது மலையாளமொழி கைகொடுக்கின்றது. அங்ஙனம் கைகொடுத்த நிலையில் தொல்காப்பியர் சுட்டிக்காட்டிய “வாடாவள்ளி” வழிபாடு இன்றுவரை நிலைபெற்றிருப்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது. இன்றைய காலச்சூழலில் அது “புதிர்நிலை வழிபாடு” என்ற புதிய நாமத்தால் அறியப்படுகின்றது.

## முடிவுரை

தமிழகத்தில் தொல்காப்பியர் காலத்தில் காணப்பட்ட ‘வாடாவள்ளி’ வழிபாடு இன்று வரை தொடர்ந்து கொண்டிருப்பதை தற்காலப் ‘புதிர்நிலை’ வழிபாடுகளின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. அழியாமலிருக்கும் பொருட்டு கற்கள் கொண்டும் சுண்ணாம்புச் சுதைகள் கொண்டும் உருவாக்கப்பட்ட புதிர்நிலைவழிகள் ‘வள்ளி’ என்று வழங்கப்பட்ட கொடிகள் போல வளைந்து நெளிந்து சென்றதால் அவற்றை ‘வாடாவள்ளி’ என்று பண்டைய மக்கள் அழைத்திருக்கின்றனர். அவை போர்க்காலங்களில் உருவாக்கப்பட்ட சக்கரவியூகத்துடன் தொடர்புடைய ஒன்று. மலையாளமொழி வழக்காறுகளின் துணைகொண்டு “வாடாவள்ளி” என்ற சொல்லின் பொருளைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. தொல்காப்பியர் குறிப்பிட்ட ‘வாடாவள்ளி’ என்பதனை கூத்து என்று கருதுவதைவிட ஒரு வழிபாடு என்று கருதுவதே பொருத்தமாக இருக்கும். அத்துடன் அது வீரர்களுக்கான ஒரு பயிற்சிமுறை என்ற பயன்பாட்டினையும் உள்ளடக்கியிருந்தது. மேற்கண்ட கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு மேலாய்வு நிகழும் நிலை உருவாகுமானால் பண்டைத்தமிழர்கள் குறித்த வரலாற்றுத் தேடல்களில் சில புதிய தகவல்கள் கிடைக்க வழியுண்டு.

## References


Govindhanar, K. (1996) Perumpaanaarruppadai, Vilakkavurai, Chennai, India.

Kandhaiya, N.C. (2008) Paththuppaattu, Tamilman Arakkattalai, Chennai, India.

Manikkavasakan, G. (2006) Tholkaappiyam moolamum vilakka vuraiyum, Uma pathippagam, Chennai, India.

Nachinaarkkiniyar, (1947) Tholkappiyam Porulathikaram, Saiva Sidhandha Nool Pathippuk Kazhakam, Chennai, India.

Nagarasan, V. (2004) Kurunthokai, NCBH, Chennai, India.

Revathi, K. (2018) Sanga ilakkiyaththil nikazhththu kalaikal, Vallamai minnithazh, Chennai, India.

Sabdhaavali, (1948) Sampoorna malayalam – Malayalam Nikandu, Kozhikode, Dhronachariya Publications, Chennai, India.

Sanmugampillai, M. (1995) Tholkappiyam porulathikaaram, Ilampooranam, Mullai nilayam, Chennai, India.

Saranraj, (2018) Arjunan udaiththa chakkara viyukaththin maaperum kanitham, Boldsky Tamil, Chennai, India. .

Subramaniyam, R. (1977) Paattum Kooththum, M.K. University, Madurai, India.

Venkadasami Nattar, N.M. (2014) Chilappathikaram, Amizdham Pathippagam, Chennai, India.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License